**செய்தி வெளியீடு எண்: 383** **நாள்: 04.07.2012**

## செய்தி வெளியீடு

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலையினை உயர்த்துவதற்காக பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இந்த வகையில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதிகள் அனைத்திலும், மாணவர்கள் தங்கி படிப்பதற்கு ஏற்ற வகையில் நல்ல ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழல் அமைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் 84 மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஆணைகள் பிறப்பித்துள்ளார்கள்.

தற்போது, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் இயங்கி வரும் 1238 விடுதிகளில், 2 விடுதிகளில் மட்டும் துப்புரவு பணியாளர்கள் உள்ளனர். எனவே, எஞ்சிய 1236 விடுதிகளையும் நல்லமுறையில் தூய்மையாக பராமரிக்கும் வகையில் ஒவ்வொரு விடுதியிலும் துப்புரவாளர் பணியிடம் ஏற்படுத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி 100 மாணவ, மாணவியருக்கு மேல் தங்கிப் படிக்கும் 66 விடுதிகளுக்கு, ஒரு விடுதிக்கு ஒரு முழுநேர துப்புரவு பணியாளர் என்ற அடிப்படையில் 66 துப்புரவு பணியாளர் பணியிடங்களும், 100 மாணவ, மாணவியருக்கு குறைவாக உள்ள 1170 விடுதிகளுக்கு, விடுதி ஒன்றுக்கு ஒரு பகுதிநேர துப்புரவு பணியாளர் வீதம் 1170 பகுதி நேர துப்புரவு பணியாளர் பணியிடங்களும் ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி, மொத்தம் 1236 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 3 கோடியே 36 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

அரசின் இந்த நடவடிக்கையின் மூலம் அரசு மாணவ, மாணவியர் விடுதிகள் நல்ல சுகாதார மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலுடன் விளங்கும். இதன் மூலம் இங்கு தங்கி பயிலும் மாணவ, மாணவியர் முழுக்கவனத்துடன் கல்வி பயில வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 4.7.2012.